# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1990/2 - 2016 ඔක්තෝබර් මස 24 වැනි සඳුදා - 2016.10.24

1990/2 ஆம் இலக்கம் - 2016 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 24 ஆந் திகதி திங்கட்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்

காணி அமைச்சின் குறிப்பு இல.: 13/97/எப்ஆர்/199.

எனது குறிப்பு இல.: வ/கா/2/அத்/17.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக் கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் பிரகாரம் நான் இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்தில், வலல்லாவிட்ட பிரதேச செயலாளர் பிரிவில் கப்மன கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை அதிபதியால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கிராம வரைபட இல. 80, பிற்சேர்க்கை இல. 06 இல் சுமார் 10.7270 ஹெக்டயார் மொத்த விஸ்தீரணமுடைய துண்டு இல. 114, 117 மற்றும் இறுதிக் கிராம வரைபட இல. 87, பிற்சோக்கை இல. 10 இல் சுமார் 11.5588 ஹெக்டயார் மொத்த விஸ்தீரண முடைய காணித் துண்டுகள்.

**1. துண்டு இலக்கம்: 385**

காணியின் பெயர்: டெடியஓவிட்ட, கம்மன்வெலஓவிட்ட, லியனகெதர அலியஸ் கம்மன்வெலஓவிட்ட, கங்காஅத்தர தெனிய, கடோலகெரவ அலியஸ் கங்காஅத்தரதெனிய மற்றும் பெந்தரகங்கா அத்தரதெனிய; விபரம்: காடு மற்றும் ஈரலிப்பான நிலம்; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 11.5688 ஹெக்டயார்.

**2. துண்டு இலக்கம்: 114**

காணியின் பெயர்: கடோல, அம்பகஸ்துடுவேகும்புர மற்றும் கிரிலிகஹஓவிட்ட; விபரம்: காடு மற்றும் ஈரலிப்பான நிலம்; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடிய வில்லை; விஸ்தீரணம்: 8.3570 ஹெக்டயார்.

**3. துண்டு இலக்கம்: 117**

காணியின் பெயர்: கடோல, கிரிலிகஹஓவிட்ட; விபரம்: காடு மற்றும் ஈரலிப்பான நிலம்; ஆரம்ப உரிமை கோருபவர்: கண்டுபிடிக்க முடியவில்லை; விஸ்தீரணம்: 2.3660 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகார மளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 23 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு வலல்லாவிட்ட பிரதேச செயலகத்தில் என்முன்பாக வெளிப்படுத்தும்படியும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும், 2016 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 16 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் முப்பிரதிகளாக எனக்கு அறிவிக்கும்படியும் இத்தால் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

டீ. ஆர். ஜயசிங்க,
பிரதேச செயலாளர்,
வலல்லாவிட்ட.

பிரதேச செயலகம்,
வலல்லாவிட்ட,
2016, ஒற்றேபர் 03.

11 - 380